**In the Court of District Munsif, Sathyamangalam.**

08.01.2019 /2/ அ.வ.எண்.93/2013 வா.சா.1

சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1, 2 பிரதிவாதிகள் எனது உறவினர்களா என்றால், 2-ம் பிரதிவாதி சின்னராஜ் என் அக்கா மகன். 1-ம் பிரதிவாதி என உறவினரல்ல. அவர் 2-ம் பிரதிவாதியின் சித்தப்பா மகன். நாங்கள் மூவரும் ஒரே ஊரா என்றால் இல்லை, பிரதிவாதிகள் இருவரும் எல்லிப்படுகு அருகே உள்ள சாலட்டி கிராமம். நான் குத்தியாலத்தூர் கிராம திண்ணையூரில் குடியிருந்து வருகிறேன். எங்கள் ஊருக்கும் பிரதிவாதிகள் ஊருக்கும் இடையே 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். 1-ம் பிரதிவாதி தங்கராஜுக்கு நான் பொது அதிகாரம் எழுதி கொடுப்பதற்கு முன்பாக அவரை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியுமென்றால் அவரை எனக்கு தெரியாது. நான் 2-ம் பிரதிவாதி சின்னராஜுக்கு தான் அடமான பத்திரம் எழுதிக் கொடுத்தேன். நான் 1-ம் பிரதிவாதி பெயரில் எதுவும் பொது அதிகாரப் பத்திரம் எழுதி வைக்கவில்லை. நான் யாரிடம் கடன் கேட்டேன் என்றால் 2-ம் பிரதிவாதி சின்னராஜுவிடம் கடன் கேட்டேன். எவ்வளவு ரூபாய் கடன் கேட்டேன் என்றால் ரூ.25,000/- கடன் கேட்டேன். எப்போது கடன் கேட்டேன் என்றால் 12 ஆண்டுகளுக்கு முன்பாக கடன் கேட்டேன். நான் ரூ.25,000/-ஐ 2-ம் பிரதிவாதி சின்னராஜுவிடம் கடன் பெற்றேன். பொது அதிகாரப் பத்திரத்தை எழுதுவதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக நான் 2-ம் பிரதிவாதியிடம் ரூ.25,000/-ஐ கடனாக பெற்றேன் என்றால் 10 நாட்களுக்கு முன்பாக பெற்றேன். நான் பணம் ரூ.25,000/-ஐ சின்னராஜுவிடம் தான் பெற்றேன். எத்தனை ரூபாய் வட்டிக்கு 2-ம் பிரதிவாதியிடம் கடன் பெற்றேன் என்றால், மாதம் ஒன்றிக்கு ரூ.100/-க்கு ரூ.2/- பேசி கடன் பெற்றேன். ஒரு வருடத்திற்கு ரூ.10,000/- வட்டி வீதம் 3 வருடம் வட்டி செலுத்தினேன். அதன் பின்னிட்டு அசலையும் கொடுக்கவில்லை, வட்டியையும் கொடுக்கவில்லை. கடந்த 12 வருடங்களாக அசல் ரூ.25,000/- ஐ 2-ம் பிரதிவாதிக்கு நான் செலுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அதற்குள் அவர்கள் நிலத்தினை கிரயம் செய்து கொண்டார்கள். அந்த கிரயப் பத்திரம் செல்லாதென சொல்லி தாக்கல் செய்த இந்த வழக்கிலாவது அந்த கடன் தொகை ரூ.25,000/-ஐ நான் 2-ம் பிரதிவாதிக்கு செலுத்த

தயாராக உள்ளேன் என சொல்லியுள்ளேனா? என்றால் சொல்லியுள்ளேன். தாவா வழக்குரையில் எங்கே சொல்லியுள்ளேன் என்றால், எனக்கு எழுத, படிக்க தெரியாது. ரேகை மட்டும் தான் வைப்பேன். நான் ரேகை வைத்து தாக்கல் செய்த முதல்நிலை நிரூபண பிரமாண வாக்கமூலத்திலாவது ரூ.25,000/-ஐ வட்டியுடன் செலுத்த தயாராக உள்ளேன் என சொல்லியுள்ளேனா? என்றால் வக்கீலிடம் சொல்லியுள்ளேன், அவர் அதை எழுதி தாக்கல் செய்துள்ளாரா? என்று எனக்கு தெரியாது. எனக்கு 1-ம் பிரதிவாதியை யாரென்றே எனக்கு தெரியாது. 2-ம் பிரதிவாதியிடம் தான் நான் வட்டிக்கு கடன் வாங்கினேன். 1-ம் பிரதிவாதியிடம் நான் எந்தவித தொகையும் கடனாக பெறவில்லை. அவ்வாறான சூழ்நிலையில் 1-ம் பிரதிவாதி பெயரில் எதற்காக பொது அதிகாரப் பத்திரம் எழுதி வைத்தேன் என்றால் தற்போது நீதிமன்றத்தில் வக்கீல் கேட்டதில் கைரேகை வைத்து, முதல் விசாரணையில் என்ன விபரம் உள்ளதென்று தெரியாமல் தாக்கல் செய்ததது போல தான், அப்போதும் ரேகை வைத்து கொடுத்தேன். அதில் யார் பெயரில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. பொது அதிகாரப் பத்திரம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் பத்திர அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. அந்த பத்திர எழுத்தர் யாரென்று எனக்கு தெரியாது. எனக்கு 7.50 ஏக்கர் சொத்து உள்ளது. அதன் புல எண் எனக்கு தெரியாது. பொது அதிகாரப் பத்திரம் எழுதும் போது எந்த புல எண்ணில் எவ்வளவு சொத்து உள்ளதென்ற விபரமும், அது எந்த நான்கெல்லைக்குள் எந்த சொத்தினை பொது அதிகாரப் பத்திரத்தில் எழுதி வைக்கிறேன் என்ற விபரத்தையும் நான் தான் சொன்னேன். பொது அதிகாரப் பத்திரம் எழுதிய பின்னர் பத்திர எழுத்தர் எனக்கு படித்து காண்பிக்கவில்லை. பின்னிட்டு, பொது அதிகாரப் பத்திரத்தை பதிவு செய்வதற்காக பதிவு அலுவலகத்திற்கு பத்திரம் உள்ளே சென்றது. பத்திர பதிவு அலுவலகத்திலிருந்த பதிவாளர் பொது அதிகாரப் பத்திரத்திலுள்ள விபரங்களை எனக்கு படித்து காண்பித்து கேள்விகள் கேட்கவில்லை. அவர் எதுவும் கேட்காத சூழ்நிலையில் நானாக தான் பொது அதிகாரப் பத்திரத்தில் கைரேகை வைத்து பதிவு செய்து கொடுத்துவிட்டு வந்தேன். 1-ம் பிரதிவாதி தங்கராஜுவை யாரென்றே தெரியாது என்றும், அவரிடம் நான் எந்த கடன் வாங்கவில்லை என்றும், 2-ம் பிரதிவாதி சின்னராஜுவிடம் ரூ.25,000/- கடனாக வட்டிக்கு பெற்றுக் கொண்டு அவருக்கு தான் பொது அதிகாரப் பத்திரம் எழுதி வைத்தேன் என்ற விபரத்தை நான் எனது வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா? என்றால் சொல்லியுள்ளேன். நான் அது போல எந்த விபரங்களும் சொல்லவில்லை என்றும், தற்போது வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தினை விற்பனை செய்ய வேண்டி தான்

1-ம் பிரதிவாதிக்கு பொது அதிகாரப் பத்திரம் எழுதி வைத்தேன் என்றும், அதனடிப்படையில் தான் 1-ம் பிரதிவாதி, 2-ம் பிரதிவாதிக்கு சொத்தினை கிரயம் செய்து கொடுத்தார் என்றும், தற்போது அதை ஏமாற்ற வேண்டி 1-ம் பிரதிவாதியை யாரென்றே தெரியாதென்றும், அவரது பெயரில் பொது அதிகாரப் பத்திரம் எழுதி வைக்கவில்லை என்றும், 2-ம் பிரதிவாதியிடம் தான் கடனாக ரூ.25,000/-ஐ பெற்றுக் கொண்டு, அவரது பெயரில் பொது அதிகாரப் பத்திரம் எழுதி வைத்தது போல தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 2-ம் பிரதிவாதி சின்னராஜுக்கு தான் எனது சொத்தினை அடமானமாக கொடுத்தேன். 2-ம் பிரதிவாதி சின்னராஜுக்கு தான் நான் சொத்தினை அடமானமாக எழுதிக் கொடுத்தேன் என்று தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேனா? என்றால் ஆமாம். பொது அதிகாரப் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ள அண்ணாமலை மற்றும் விஜயன் ஆகியோர்களை எனக்கு யாரென்றே தெரியாது. பொது அதிகாரப் பத்திரம் எழுதி வைக்க 1-ம் பிரதிவாதி தங்கராஜ் எதுவும் என்னிடம் கேட்டாரா? என்றால் அவர் எதுவும் கேட்கவில்லை, அவர் எனக்கு யாரென்றே எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதி பெயரில் எழுதி வைக்கப்பட்ட பொது அதிகாரப் பத்திரத்திற்கு பின்னர் எத்தனை நாட்கள் கழித்து 2-ம் பிரதிவாதி பெயரில் கிரயப் பத்திரம் எழுதப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 2-ம் பிரதிவாதி பெயரில் எனது சொத்தினை அடமானமாக தான் எழுதி வைத்தேன். நான் அடமானமாக கொடுத்த சொத்தினை பொது அதிகாரமாக 1-ம் பிரதிவாதி பெயரில் மாற்றி, 2-ம் பிரதிவாதி பெயரில் கிரய ஆவணமாக எழுதி வைக்கப்பட்ட விபரம் எனக்கு எப்போது தெரியுமென்றால் 9 வருடங்களுக்கு முன்பு எனக்கு தெரிய வந்தது. அவ்வாறு தெரிந்த உடனேயே கிரய ஆவணம் செல்லாதென வழக்கு தாக்கல் செய்துள்ளேனா? என்றால் எனது மகனும் இறந்து விட்டான், நான் வைத்த வக்கில் திரு.பாலசுப்பிரமணியன் அவர்களும் இறந்து விட்டார். அதனால் 4, 5 வருடங்கள் நான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் பின்னிட்டு தான் நான் வழக்கு தாக்கல் செய்தேன். குறிப்பாக எந்த தேதி, மாதம் கிரயப் பத்திரம் எழுதப்பட்ட விபரம் எனக்கு தெரிய வந்தது என்று என்னால் சொல்ல முடியாது. 9 வருடங்களுக்கு முன்பு கிரயப் பத்திரம் எழுதியாக எனக்கு யார் மூலம் தகவல் வந்தது என்றால் நானாகவே தான் தெரிந்து கொண்டேன். நான் கடன் வாங்கிய பின்னர், 3 வருடங்கள் கழித்து கடந்த 2009 வருடத்தில் அசலையும், வட்டியையும் செலுத்தலாம் என்று பதிவாளர் அலுவலகம் சென்று போய் பார்த்த போது, எனது சொத்தை அவர்கள் கிரயமாகவே

எழுதிக் கொண்டது எனக்கு தெரிய வந்தது. 2009-ம் வருடத்திலேயே பொது அதிகாரப் பத்திரத்தின் சான்றிடப்பட்ட நகலையும், கிரயப் பத்திரத்தின் சான்றிடப்பட்ட நகலையும் பதிவாளர் அலுவலத்திலிருந்து பெற்று பார்த்தேன். 2009-ம் வருடத்தில் நான் பெற்ற சான்றிடப்பட்ட நகல்களை இந்த வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. கடந்த 2009-ம் வருடத்திலேய நான் பணத்தை கட்ட தயாராக உள்ளதாக சொல்லி, அந்த கிரயத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தேனா? என்றால் அதன் பின்னிட்டு தான் வழக்கறிஞர் வைத்தேன். கடந்த 2009-ம் வருடத்திலேயே பொது அதிகார பத்திரத்தின் மூலம் கிரயப் பத்திரம் எழுதப்பட்ட விபரம் தெரிந்து கொண்ட நான், 2013-ம் வருடம் வரை ஏறத்தாழ 5 வருடங்கள் அந்த கிரயப் பத்திரத்தை ரத்து செய்ய எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்கான காரணங்களை தாவா வழக்குரையில் சொல்லியுள்ளேனா? என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு எழுத, படிக்க தெரியாது. 2006-லேயே கிரயம் செய்த விபரம் எனக்கு தெரியுமென்றும், அதற்குண்டான தொகையை அப்போது பெற்றுக் கொண்டேன் என்றும், தற்போது சொத்தின் மதிப்பு அதிகமாகி விட்டதால், ஏதாவது ஒரு காரணம் சொல்லி வழக்கு தாக்கல் செய்தால், மீண்டும் பணம் கொடுத்து செட்டில்மெண்ட் செய்வார்கள் என நினைத்து தவறான காரணங்கள் சொல்லி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2006-ம் வருடம் நடைபெற்ற கிரயத்திற்கு ஏறத்தாழ 7 ஆண்டுகள் கழித்து கடந்த 2013-ல் தாக்கல் செய்த இந்த வழக்கு கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதென்றும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த பொது அதிகாரப் பத்திரத்தில் கண்டுள்ள ஷரத்துக்கள்படி தான், 1-ம் பிரதிவாதி, 2-ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்தார் என்றும், அவ்வாறு பெற்ற கிரயத் தொகையினையும் என்னிடம் செலுத்தி அதற்குண்டான ரசீதினை 1-ம் பிரதிவாதி பெற்று வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் எந்த தொகையும் கொடுக்கவில்லை. பொது அதிகாரப் பத்திரமே செல்லாதென விளம்புகை பரிகாரம் கோராமல், அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்ட கிரயப் பத்திரம் செல்லாதென விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்த இந்த வழக்கானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. ரூ.25,000/- கடனுக்கு 7.50 ஏக்கர் சொத்தினை அடமானமாக எழுதி கொடுக்க மாட்டேன் என்று நான் 2-ம் பிரதிவாதியிடம் மறுப்பு தெரிவித்தேனா? என்றால் 2-ம் பிரதிவாதி எனது அக்கா மகன். அவர் என்னை ஏமாற்றமாட்டார் என்று நினைத்து அவருக்கு அடமானமாக தான் எழுதி வைத்தேன். அது போல நான் பலமுறை அடமானமும் வைத்து கடனும் வாங்கியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள தாவா வழக்குரையில் எந்த கிரயப்

பத்திரம் செல்லாதென விளம்புகை பரிகாரம் கோரியுள்ளோனோ? அந்த கிரயப் பத்திரத்திற்கான சொத்து விபரம் குறிப்பிட்டு தாவா வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதே போல தாவா சொத்தானது எனக்கு தான் பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரமும் கோரவில்லை என்று சொன்னால் சரியல்ல. 40 வருடமாக நான் தான் அந்த சொத்தை வாங்கி அனுபவித்து வருகின்றேன். 2006-ம் வருடத்திலிருந்து நான் தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறேன் என்பதை காட்ட ஏதாவது வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா? என்றால் எனது வக்கீலிடம் கொடுத்துள்ளேன். நான் அனுபவித்து வருவதாக சொல்லியுள்ள விபரம் தவறு என்றும், கடந்த 2006-ம் வருடத்தில் தாவா சொத்தை 2-ம் பிரதிவாதி கிரயம் பெற்றதிலிருந்து அவர் தான் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, நான் தான் அந்த பூமியில் வீடு கட்டி, குடியிருந்தும் வருகிறேன். கடந்த ஒரு வருடமாக தான் 2-ம் பிரதிவாதி உழவு ஓட்டி, கொள் விதைத்து விவசாயம் செய்து வருகிறார். 50, 60 ஆட்களை கூட்டி வந்து சித்திரவதை செய்தார். நான் தாவா வழக்குரையில் சொல்லியுள்ள சொத்து விபரம் தவறு என்று சொன்னால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

(LTI.)பெருமாள்
P.W.1

(S/d.)G.Krishnan,
District Munsif,
Sathyamangalam.